1983 பிப்ரவரி 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கண்டனத்திற்கு மசியக் கூடிய நிலைமை அங்கே இருக்கிறமாதிரித் தெரியவில்லை. எந்த எந்த வகையிலே முயற்சிகளைச் செய்யமுடியுமோ அந்த அந்த வகையிலே முயற்சிகளைச் செய்கிறோம். அந்த வகையில் தனியார் தீர்மானம் வந்திருப்பதைப் போன்று மாநிலங்களுக்கு அதிகமான அளவுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்படுகிற சூழ்நிலையில் மாநிலங்களின் கைகள் ஓங்கி மாநிலங்களின் கருத்தை மைய அரசு ஏற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும், சட்டத்திற்குட்பட்ட முறையிலே இப்போது நாம் அதில வெற்றி பெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளலாம்.

நீதிமன்றங்களில் தமிழ்மொழியை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம்.

*வினா எண் 227—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதிமன்றங்களில் தமிழை ஆட்சி மொழியாக்க அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் வைத்துள்ளதா?

(ஆ) இதை உயர்நீதி மன்றத்தில் விரைவாக அமுல் படுத்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) 14-1-1970 முதல் உயர்நீதமன்றத்திற்கு உட்பட்ட குற்றவியல், உரிமை வழக்கு நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் குத்தகை மற்றும் வருவாய்த் துறை நீதிமன்றங்களில் தமிழில் சாட்சியங்களைப் பதிவு செய்யும் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. 14-11-76 முதல் உயர் நீதிமன்றத்திற்குட்பட்ட குற்றவியல் நீதிமன்றங்களிலும் 1-2-1982 முதல் உரிமை வழக்கு நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள், குத்தகை மற்றும் வருவாய்த்துறை நீதிமன்றங்களிலும் தமிழ் தீர்ப்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இது குறித்து கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே நீதிமன்ற ஆட்சிமொழியாக தமிழை ஆக்கவேண்டுமென்று நிலைமை இருக்கிறபோது சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடுகளுக்கு வழக்குகள் செல்கிறபோது உயர்நீதி மன்றத்திற்கும் உச்சநீதி மன்றத்திற்கும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் நீடிக்கவேண்டுமென்றும் அந்த வகையிலே செயல் படுத்தக்கூடிய முறையிலே அரசியல் அமைப்பு சட்டத்தின் பிரிவுகளைத் திருத்தவேண்டுமென்று மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; தலைவர் அவர்களே, தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தினுடைய பிரிவுகளின் படி உச்சநீதி மன்றத்திலே ஆங்கிலம் நடைமுறை மொழியாகவும் மாநிலங்கள் விருப்பப்பட்டால மாநில மொழிகள் மாநிலங் களில் வரலாம் என்று இருக்கிறது. உச்சநீதிமன்றத் திற்கும் உயர்நீதிமன்றத்திற்கும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருந்து வருகிறது. உயர்நீதிமன்றத்தில் மாநில மொழிகள் வருகின்றபோது உச்சநீதிமன்றத்தில் ஆங்கிலம் தான் இருக் வேண்டும், ஆங்கிலம் நீங்கலாக வேறு மொழிகள் குறிப்பாக இந்தி மொழி வந்துவிடக்கூடாது என்பதில் அரசு அக்க றையாக இருக்கிறது. இதுகுறித்த சட்டம் வரும்போது மாநில அரசு எந்த விதத்தில் வற்புறுத்த வேண்டுமோ அந்த விதத்திலே அதை வற்புறுத்தும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சிவில் நீதிமன்றங்களில் 1982 ஆம் ஆண்டு முதல் ஆட்சிமொழியாக இருக்கும் என்று சொன்னாலும் கூட ஆங்கிலத் திலேயே நீதிபதிகள் தீர்ப்புக்களை எழுதிக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. ஒருமுறை பரமக்குடியிலே ஆங்கிலத்திலே தீர்ப்பு எழுதவேண்டுமென்று இருந்து தமிழில் தீர்ப்பு எழுத விதிகள் இல்லை என்ற சூழ்நிலையில்—தமிழிலே தீர்ப்பை எழுதியதற்காக சென்னை நீதிமன்றம் ரத்து செய்தது. ஆகவே ஒரு கால கெடுவை நிர்ணயித்து அதற்குள்ளாக கீழ்நீதிமன் றங்களிலே தமிழிலே தீர்ப்பு எழுதவேண்டுமென்று ஆணையிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் கூறுவது சென்ற ஆண்டினுடைய நிலை நடப்பு ஆண்டிலிருந்து தமிழில் தான் தீர்ப்புகள் எழுதவேண்டு மென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் நீதிபதிகள் தமிழிலே தீர்ப்புகள் எழுதக் கூடிய அளவுக்கு சற்று பயிற்சியைப் பெறக்கூடியநிலை யிருப்பதால் அதையும் படிப்படியாக நாம் நிறைவேற்றி வருகிறோம். விரைவிலே முழுமையும் நிறைவேற்றலாம் என்று மாநில அரசு எதிர்பார்க்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, உயர்நீதிமன் றத்தில் தமிழை ஆட்சிமொழியாக்கவேண்டும் என்பதை நம் அரசாங்கத்தின் கொள்கை. அதை வரவேற்கிறேன். ஆனால் அதற்கு குறுக்கே நிற்பது தமிழ் தெரியாதவர்கள் சீப் ஜஸ்டிஸ் ஆக வந்தால் அது தமிழை உயர்நீதிமன்றத்தில் ஆட்சிமொழி யாக்க அந்த பொஸிஷன் குறுக்கே நிற்கிறது. இன்டர் ஸ்டேட் சீப் ஜஸ்டிஸ் டிரான்ஸ்பருக்கு நான் எதிர் அல்ல. அந்த மொழி தெரிந்த ஒரு சீப் ஜஸ்டிஸை இன்னொரு மாநிலத்திலிருந்து கொண்டுவருவதில் ஆட்சேபணையில்லை. நமது அரசாங்கம் விடாமல் மத்திய அரசுக்கு எழுதியும் இப்போது மத்திய அரசு

[1983 பிப்ரவரி 11]

ஸ்டேட்மென்ட் ஆப் பாலிசி என்று நாங்கள் அப்படித்தான் செய்வோம் என்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். இது தமிழ் மயமாக்குவதற்கு குறுக்கே நிற்கும் ஆகவே ஃபார்தராக எப்படிப் ப்ரொஸிட் செய்யப் போகிறீர்கள்? உங்கள் பொஸிஸனை எப்படி என்போர்ஸ் செய்யப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தாலும் மற்ற ப்யூனி ஜட்ஜஸ் ஆக இருந்தாலும் எந்த நீதிபதியாக இருந்தாலும் அவர்கள் கண்டிப்பாக தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் தமிழ் மொழி தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். அந்தந்த மாநிலங்களைப் பொருத்தவரையில் அந்தந்த மாநில மொழி தெரிந்தவர்களே இருக்க வேண்டுமென்றுதான் தமிழ்நாடு அரசின் கொள்கை. அதை வலியுறுத்தி பலமுறை மையஅரசுக்கு நாம்கூறியிருக்கிறோம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதையும் மீறி மையஅரசு இந்தக் கொள்கையில் அவர்கள் தன்னிச்சையாக செயல்படும்போது இந்திபேசாத மாநிலங்கள் எல்லாம் ஒரு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென்ற ஒரு சிந்தனை இருக்கிறது. அதற்காகக் கூட நடவடிக்கைகள் எடுக்க நாம் யோசித்து வருகிறோம்.

திரு. மி. வின்சென்ட் : தென்னாட்டிலுள்ள உயர் நீதிமன்றங்களில் தமிழ் தெரியாத இந்தி பேசும் தலைமை நீதிபதியை நியமிக்கக்கூடாது என்று மைய அரசுக்கு வலியுறுத்த தென்னாட்டு சட்ட அமைச்சர்கள் மாநாடு ஒன்றைக் கூட்ட இந்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சட்ட அமைச்சர்கள் மாநாடு கூடியபோது அதில் அன்றைய நிலையில்கூட கர்நாடக மாநில சட்ட அமைச்சர் அவர்கள் இந்தி மொழி பேசுகிற மாநிலங்களைச் சேர்ந்த நீதிபதிகள் கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கும் வருவதைக்கூட ஆட்சேபித்தார்கள். மாறிய இன்றைய சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப்போல் இந்தி பேசாத மாநிலங்களில் குறிப்பாக தென்னாட்டு மாநிலங்களைச் சார்ந்த அமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி பேசுகிற மாநிலத்தைச் சேர்ந்த நீதிபதிகள், மொழி தெரியாதவர்கள் நீதிபதிகளாக வருவது கூடாது என்று வற்புறுத்த தீர்மானம் போடுவது குறித்த அரசு முயற்சியினை மேற்சொள்ளும்.

சிறைச்சாலைகளில் வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

*வினா எண் 228—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிறைச்சாலைகளில் வசதிகளை அபிவிருத்தி செய்வது குறித்து மாநில அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?